ஷயத் தெரிவித்துக் கொள்கிறேன், அமைச்சர் அவர்கள் இப்போது அங்கே பணிகள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்கள். தற்போது அங்கு பணிகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் ஆட்சிக் காலத்திலே காட்பாடி தொகுதிவாழ் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மையைக் கருதி, பலசட்டமன்ற உறுப்பினர்களாலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தொடர்ந்து வலியுறுத்திவரும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்து, அந்த திட்டத்தின் நிறைவு விழாவையும் மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் நடத்தித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொண்டு, அதை விரைவில் முடிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே அணைத்திட்டம் நடைபெறவில்லை என்ற தவறான ஒரு தகவலைச் சொல்லியிருக்கின்றார். ஒரு அணை கட்டுகின்ற போது அதற்கு பூர்வாங்க வேலைகள் என்று சொல்லப்படுகின்ற அடிப்படைப் பணிகளை இந்த அரசு முதலில்எடுத்துக்கொள்கிறது. அதற்குப் பின்னாலேதான், அணை கட்டுகின்ற பணிகளை நாம் துவங்குகிறோம். இத்திட்டத்தைப் பொறுத்தவரை, இன்னும் $17\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தை வனத் துறையிடமிருந்து நாம் கையகப் படுத்த வேண்டியுள்ளது. ஆனால் அதற்கு முன்னதாக கட்டிடங்கள், அதாவது பணியாளர்கள் குடியிருப்புகளையும் அலுவலகங்களையும் கட்டும் பணிகள் நடக்கின்றன. ஒரு அணை கட்டுகின்ற நேரத்தில் முதலில் அதைத்தான் துவங்குகிறோம். அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வனத் துறை நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் இந்த அணையின் வேலைகள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 636, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

636—

பாலம் கட்டுதல்.

*4065 திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் தொகுதியில் புத்தூர் அருகே இணைப்பு சாலையில் பாலம் கட்ட திட்டம் ஆய்வு செய்யப்பட்டுள்ளதை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பாலம் கட்டும் வேலைகள் எப்போது தொடங்கும்?

1992 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்காக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, 1991–92 ஆம் ஆண்டில் அந்தப் பகுதியினுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற ரூ. 32.00 இலட்சம் ஒதுக்கி அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு நம்முடைய அரசு மூலம் 29–10–1991 அன்று ஒப்புதலும் அளிக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பால வேலை துவங்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இந்த புத்தூர் கிராம மக்களும் அதோடு சேர்ந்த 3-4 கிராம மக்களும் கடந்த 40 வருடங்களாக இந்தப் பாலம் இல்லாததால், மழைக்காலங்களில் அந்த இடம் மிகவும் ஆழமாக இருப்பதால் தண்ணீர் ஓடும்போதெல்லாம் ஒரு தீவைப்போல ஒரு வாரம் இரண்டு வாரம் என்று நீண்டகாலத்திற்கு அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். குறிப்பாக அந்தப் பாலம் கட்டாததால், கடந்த சட்டப்பேரவைத் தேர்தலை அந்த மக்கள் புறக்கணித்துவிட்டார்கள். அப்படியிருந்தும், நாங்கள் வெற்றிபெற்று நன்றி சொல்லப்போகும்போது 1,000 பேர் இரவு ஒரு மணிக்கு எங்கள் காருக்கு முன்னால் படுத்துக்கொண்டு எங்கள் மேல் ஏற்றிச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. தி. சாத்தையா : ஆகையால் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில், 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க, நமது புரட்சித் தலைவியின் ஆட்சியில், அவர்கள் தேர்தலைப் புறக்கணித்தாலும், அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான அந்தக் கட்டப்படாத பாலத்தைக் கட்ட வேலைகள் ஆரம்பிக்க இருப்பதற்காக அந்தக் கிராம மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் புரட்சித்தலைவி அவர்களுக்கு அன்பார்ந்த நன்றியைக் காணிக்கையாக அவர்களின் பாதங்களில் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 637, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.